**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **50**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாபுஜி சிவராமன் | Caste: | |
| Father'sName : | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2. A4, A7, A8, A9, A10, A13, A14, A15, A17, A19 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **15.03.2023**

**முதல் விசாரணை**:

நான் நீதித்துறையில் தலைமை எழுத்தராக பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் முன்னதாக செங்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் எழுத்தராக பணிபுரிந்தபோது வழக்கமாக எங்கள் நீதிமன்ற நிபந்தனை பிணை மற்றும் மாவட்ட நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நிபந்தனை பிணையில் சென்றவர்கள் ஆஜராகி கையெழுத்திடும் நபர்கள் முதலில் அழைத்து அதன் பின்னர் வழக்கமான பணிகளை துவக்குவோம். அதன் அடிப்படையில் 14.08.2007 ம் தேதி அவ்வாறு வழக்கமாகவும் ஆஜராக வேண்டிய எதிரிகளை அழைத்து நீதிபதி பார்வையிட்ட பின்னர் அவரிடம் ஒப்புதல் பெற்று அனுப்பி விட்டேன். அதன்படி 14.08.2007 ம் தேதி காலை

10.00 மணிக்கு கன்னியாகுமரி NIBCID குற்ற எண். 6/2007 , பிரிவு 8(C) 20(b)(ii)(A) NDPS Act STC. 4092/2007 படியான வழக்கின் எதிரி தென்காசி இலஞ்சிரோடு பரமசிவத்தேவர் மகன் செண்பகம் என்பவர் ஆஜராகி கையெழுத்துபோட்டார். 10.30 மணிக்கு நீதிமன்ற நடுவர் வரிசையாக கூப்பிடும்போது ஆஜராகி சென்றுவிட்டார். இதுசம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

இறந்துபோன செண்பகம் காலை 10.00 மணிக்கு வந்துவிட்டார். நீதித்துறை நடுவர் 10.30 மணிக்கு அழைத்தபோது செண்பகம் மற்ற நிபந்தனை கையொப்பம் இடுபவர்களுடன் வரிசையில் ஆஜரானார்.

-